# வவுனியா வடக்கு பிரதேச சபை,நெடுங்கேணி

## கேள்வி அறிவித்தல்

வவுனியா வடக்கு பிரதேச சபைக்கு சொந்தமான மரக்கறி மொத்த கொள்வனவு நிலையங்களை 01/11/2024 தொடக்கம் 31/12/2025 வரையான காலப்பகுதிக்கு வாடகைக்கு வழங்குவதற்காக கேள்விகள் கோரப்படுகின்றன.

*கேள்வி அறிவித்தல் அட்டவணை*

| இல | கடை விபரம் | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரப் பணம் | மீளளிக்கப் படும் கேள்வி வைப்பு பணம். | ஒப்பந்த காலப்பகுதிக்கான இயந்திர உபகரண தேய்மான வைப்புப்பணம் | மாத வாடகை |
|---|---|---|---|---|---|
| 01 | கனகராயன்குளம் மொத்த மரக்கறி கொள்வனவு நிலையம் | 2,000.00 | 10,000.00 | 100,000.00 | 4,500.00 |
| 02 | சம்பத்நுவர மொத்த மரக்கறி கொள்வனவு நிலையம் | 2,000.00 | 10,000.00 | 100,000.00 | 4,500.00 |

**கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் 2024.10.09 – 2024.10.24 பிற்பகல் 1.30 வரை**
**கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளுதல் 2024.10.24 பிற்பகல் 02.00 மணி வரை**

**கேள்விப் பத்திரம் திறக்கப்படும் நேரம் 2024.10.24 பிற்பகல் 02.05 மணி**

***கேள்வி நிபந்தனைகள்***

1. **கேள்விதாரர் இலங்கைப்பிரஜையாக இருக்கவேண்டும் என்பதுடன் 18 வயதுக்கு மேற்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.**
2. கேள்விப் பத்திரம் பெறவிரும்புவோர் கோரிக்கைக் கடிதம், தேசிய அடையாள அட்டை மற்றும் அதன் நிழற்படப் பிரதி, கிராம சேவையாளரால் உறுதிப்படுத்தப்பட்ட வதிவிட சான்றிதழ் என்பவற்றை சமர்ப்பித்தல் வேண்டும்.
3. கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிதி மற்றும் இரண்டாம் பிரதி என்பனவற்றை தனித்தனி உறைகளில் இட்டு ''**செயலாளர், வவுனியா வடக்கு பிரதேசசபை, நெடுங்கேணி**'' என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் **2024.10.24** ஆம் திகதிக்கு முன்னதாக கிடைகக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும் அல்லது பிரதேச சபை தலைமைக்காரியாலயத்தில் கேள்விப்பெட்டியினுள் இடமுடியும்.

4. உள்ளூராட்சி மன்றங்களினால் **“தவறுனராகக்”** கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்டபின் **தவறுனராக** அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
5. ஒரு கடைக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் **திருவுளச்சீட்டு முறை** அடிப்படையில் கேள்விதாரர் தேர்வுசெய்யப்படுவார்.
6. வாடகைக்காலம் 01.11.2024 தொடக்கம் 31.12.2025 வரையான காலம் ஆகும்.
7. கடைக்கான **மாதவாடகையாக 4500.00** ரூபாவும் செலுத்தப்படல் வேண்டும். எனினும் வாடகைத் தொகை காலத்துக்குக் காலம் பிரதேச சபையினால் நிர்ணயிக்கப்படும்.
8. மரக்கறி மற்றும் பழங்களைக் களஞ்சியப்படுத்துவதற்கான **இயந்திரம் மற்றும் உபகரணங்கள் எம்மால் வழங்கப்படும்.**
9. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை ஏற்கவோ, நிராகரிக்கவோ கேள்வி சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
10. கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது எழுத்து மூல சம்மதம் பெற்ற பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
11. கடைகளை பெற்றுக்கொள்வோர் பொது சுகாதார நடைமுறைகளினை பின்பற்றுவதுடன் கடை மற்றும் அதன் சுற்றாடலில் உள்ள கழிவுகளை சேகரித்து அப்புறப்படுத்துவதற்கு முழுப் பொறுப்பாளியாவீர்கள்.
12. கேள்வி விண்ணப்பங்களை பெறுபவர் கேள்வி நிபந்தனைகளை முழுமையாக ஏற்றுக்கொண்டே கேள்வி விண்ணப்பங்களை பெறுபவராக கருதப்பட்டு கேள்வி விண்ணப்பங்களை சமர்ப்பிக்காத பட்சத்திலும், கேள்வியில் சித்திதர கேள்விதாரர் ஆனதன் பின்னர் ஒப்பந்தத்தினை மேற்கொள்ளாத பட்சத்திலும் கேள்வி வைப்புப்பணம் மீள வழங்கப்பட மாட்டாது.

கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் நேரில் அல்லது 024-2030200, மற்றும் 0242053014 எனும் தொலைபேசி மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம்

செயலாளர்,
வவுனியா வடக்கு பிரதேச சபை.